# இந்து சமய சின்னங்கள்

## ருத்ராக்ஷம்

சிவ சின்னங்களில் முதன்மையாகப் போற்றப்படுவது விபூதி, ருத்ராக்ஷமாகும். சிவபெருமானின் கண்களிலிருந்து தோன்றியது ருத்ராக்ஷமாகும். ஒரு முகம் முதல் இருபத்தொரு முகங்கள் கொண்ட ருத்ராக்ஷங்கள் மிகவும் சிறந்ததாகச் சொல்லப்படுகின்றன. சிவாச்சாரியார்கள் பூஜா காலங்களில் ருத்ராக்ஷ மாலைகள், சிகாமணி மாலை, கௌரி சங்கம் என்று சொல்லப்படுகின்ற சிவனும் சக்தியும் இணைந்ததாக இருக்கின்ற மாலை அணிந்திருக்க வேண்டும் என்று சிவாகமத்தில் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றது. மந்திர ஜபங்கள் ஜபிக்கப்படும்போது சிவனடியார்கள் ,சன்னியாசிகள், சமயஆச்சார்யர்கள் சமயஅனுஷ்டானத்தின் போது ருத்ராக்ஷ மாலை அணிவது அவசியமாகும். ருத்ராக்ஷ மாலை அணியும் போது நாம் ஆசார சீலர்களாக இருப்பது அவசியமாகும். இதனால் நமது உள்ளமும் புறமும் தூய்மையும்,தெய்வீகமும் அடைகின்றது.

## விபூதி

திருப்பாற் கடலில் இருந்து தோன்றிய காமதேனு என்ற தெய்வீக பசுவின் வழியில் தோன்றிய பசுக்களின் சாணத்தை எடுத்து காயவைத்து நீறாக்கிய சாம்பலே புனித திரு நீறாகும். இதனால் இந்து சமயத்தில் பசுக்களை கோமாதா என்று போற்றி வழிபடுகின்றோம். சிவசின்னங்களில் அடுத்து போற்றப்படுவது விபூதியாகும். விபூதி என்பதற்கு பஸ்மம், பசிதம், ரக்ஷை, திருநீறு என்று பல பெயர்கள் கொண்டு அழைக்கின்றார்கள். மேலான செல்வத்தைக்கொடுப்பது விபூதி, பாவங்களைப் போக்கி எரிப்பது பஸ்மம், இடையூறுகள் வராமல் காப்பது ரக்ஷை, உயர்நததாகப் போற்றப்படுவது திருநீறு, வெண்ணிறமுமாகவும், சாம்பலாகவும் இருப்பதால் வெண்ணீறாகும். விபூதியை கையில் எடுத்து நீர் விட்டு குழைத்து கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ நின்று சிவ சிவ என்று சொல்லி தலை, நெற்றி, மார்பு, தொப்பூள், முழங்கால் இரண்டு மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்று பதினாறு இடங்களிலும் நடுவிரல், ஆட்காட்டிவிரல், மோதிரவிரல்களால் முக்குறிகளாக தரிப்பது திருபுண்டரமாகும். விபூதியை நெற்றி, மார்பு, கைகளில் எடுத்து பரவிப்பூசுவது உத்தூளனமாகும்.

விபூதியை அர்ச்சகரிடம் இருந்து வாங்கும் பொழுது இடதுகை கீழும் வலதுகை மேலும் வைத்து பய பக்தியுடன் வாங்கி சிவ சிவ என்று சொல்லி அண்ணாந்து கீழே சிந்தா வண்ணம் பூச வேண்டும். விபூதியின் சிறப்பை வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், புராணங்கள், திருமுறைகள், சித்தாந்த சாஸ்த்தரங்கள் என்பவற்றில் சிறப்பாக கூறப்பட்டிருக்கின்றது. சமய குரவரான திருஞானசம்பந்த சுவாமிகள் தனது திருமுறையில் மந்திரமாகவும், வேதமாகவும், ஆகமமாகவும், துன்பத்தை ஒழிப்பதும் ,ஞானத்தை தருவதும், மோக்ஷத்தைத் தருவதும், பேரின்பத்தை தருவதும், இம்மைக்கும், மறுமைக்குக்கும், பயனாக இருப்பதும் திருநீறே என்று போற்றிப் பாடியருளியுள்ளார்.
நீறில்லா நெற்றி பாழ் என்பது பெரியோர்வாக்கு. ஆகவே நாம் அனைவரும் விபூதி, ருத்ராக்ஷம் முதலான சிவ சின்னங்களை அணிந்து சைவர்களாக திகழ்வோம்.

## திருமண்

இந்து மதத்தில் வைணவர்கள் தங்கள் உடம்பில் தரிப்பது திருமண் காப்பு என்று சொல்லும் திருமண்ணாகும். நாமம் என்று அழைக்கப்படும் திருமண் காப்பில் நாமக்கட்டியை கொண்டு மஹாவிஷ்ணுவை நினைத்தும், இடையில் மஹாலக்ஷ்மியின் பக்தியை குறிக்கும் ஸ்ரீ சூர்ணம் சேர்த்து நாமம் இட்டுக்கொள்கின்றார்கள். சந்தனத்தில் ஒருவகை கோபி சந்தனமாகும். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பாதங்களை கோபிகைகள் தங்கள் கைகளால் சந்தனம் கொண்டு கழுவியதால் அந்த இடத்தில் மண்ணுடன் கலந்த அந்த ஒருவகையான களிமண்ணே கோபிசந்தனமாகும்.

பரந்தாமனின் பாதாரவிந்தமே உயர்வுக்கும் உயிர்க்கும் கதி என்பதை உணர்த்தும் பொருட்டு திருவடி போன்று நெற்றியில் இடப்படுகிறது. மத்தியில் இடப்படும் செந்தூரம் லக்ஷ்மியின் அம்சம். சமஸ்கிருத வேத சாஸ்திரங்களுக்கு பிரதானம் கொடுக்கும் வடகலையார் பாதம் வைக்காமல் இடுவர். ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு ஏற்றம் கொடுக்கும் தென்கலையார் திருமண் காப்பின் கீழ் பாதம் வைத்து இடுவர். மகாவிஷ்ணுவுக்கு கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுசூதன, திரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷீகேச, பத்மநாப, தாமோதர என்று பன்னிரண்டு நாமங்கள் முக்கியம். இந்த துவாதச நாமங்களைச்

சொல்லிப் பன்னிரண்டு இடங்களில் திருநாமங்களை இட்டுக் கொள்வார்கள். இப்படி பகவந் நாமத்தைச் சொல்லிப் போட்டுக்கொள்வதாலேயே 'நாமம் போடுவது' என்று பெயர் வந்துவிட்டது.

**குங்குமம்**

மஞ்சள் கட்டியிலிருந்து தயாரிக்கப்பட்ட குங்குமத்தை பெண்கள் தங்கள் நெற்றியில் திலகமாக இட்டுக்கொள்வதால் தங்கள் சமய கலசாரத்தையும்,மங்களத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. திருமணத்தின்போது பெண் மணமகனால் மணமகளுக்கு திருமாங்கல்யம் கட்டி குங்குமத்தை நெற்றியிலும், நெற்றி வகிட்டிலும், திருமாங்கல்யத்திலும் இடுவதன் மூலம் சுமங்கலியாகின்றாள். சக்தி வழிபாட்டிலே சுமங்கலிப் பெண்களை நவசக்திகளாக இருத்தி அர்ச்சனை, உபசாரங்கள் செய்து சக்தியின் ரூபமாக ஆராதித்து வழிபடுகின்றோம்.

**சந்தனம்**

அபூர்வமாக கிடைக்கன்ற சந்தன மரங்களிலிருந்து தயாரிக்கப்படுவது சந்தனமாகும். ஒருவரது நெற்றியின் நடுப்பகுதியில் பக்தியையுணர்த்தக்கூடிய மூன்றாவது கண் அமைந்துள்ளது. சந்தனத்தை குழைத்து நெற்றியில் புருவ மத்தியில் அணிவதால் உடல் குளிர்ச்சியடைகிறது. இவ்விடத்தை "அஞ்சனாசக்ரா" என்பார்கள். இதனாலேயே நெற்றியின் நடுப்பகுதியினை திலகம் இடுவதற்க்கு நம் முன்னோர்கள் தேர்தெடுத்தார்கள். சந்தனத்தில் செஞ்சந்தனம், வெண்சந்தனம், கருஞ்சந்தனம் என சில வகைகள் உண்டு. அவைகளுக்கு சில சக்திகளும் உண்டு. இறைவனுக்கு அபிஷேக காலங்களில் எல்லாவிதமான திரவியங்களால் அபிஷேகம் செய்தபின் கடைசியாக வாசனையுள்ள சந்தனத்தால் அபிஷேகம் செய்கிறார்கள். இதனால் இறைவனின் திருமேனியும்,எமது உள்ளமும் குளிர்ச்சியடைகின்றன.

**தர்ப்பை**

திருப்புல், தூப்புல் என்று சொல்லபடுகின்ற ஒரு வகை நாணல் புல்லானது ஸ்ரீ ராமபிரானின் திருமேனிபட்டு வளர்ந்ததாலும் தர்ப்பை என்ற பெயர் கொண்டு அழைக்கின்றோம். இதனால் தர்ப்பைக்கு அதிக சிறப்புகள் உண்டு. நீரைச் சுத்தப்படுத்துவது, உலோகங்கள், கற்சிலைகளின் அழுக்கைப் போக்குவது, தேவர்களுக்கும், பிதுர்களுக்கும் உகந்ததாகவும் அமைந்துள்ளது. கும்பாபிஷேகக்கிரியை காலங்களில் 108 தரப்பைகளாலான கூர்ச்சம் பிரதான கலசத்திற்கு சிகையாக அணிவிக்கப்படுகிறது. அக்னியிலிருந்து கும்பத்திற்கும். கும்பத்திலிருந்து பிம்பத்திற்கும் தொடர்பினை ஏற்படுத்துவதற்க்கும் தர்ப்பைக்கயிறு பயன்படுத்தப் படுகிறது. ஆலய கிரியைகளின் போதும் வைதிக, சுப, அபர காரியங்களின் போதும் தர்ப்பைகளால் மோதிர வடிவிலான பவித்ரம் மோதிர விரலில் அணிவிக்கப்படுகிறது. கிரகணகாலங்களில் தர்ப்பை புல்லை உணவின் மேல் போட்டு மூடுவதால் கிரகண தோஷம் பிடிக்காது என்பது ஐதீகம். தர்பை, எள்ளு விஷ்ணுவின் சரீரத்திலிருந்து தோன்றியவை. சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய அக்னியை சரவணப் பொய்கையில் நாணல் புல்லான தர்ப்பைப் புல்லின் மேல் வைக்க ஆறு முகங்களுடன் முருகப் பெருமான் அவதரித்தார். இப்படி சிறப்பு வாய்ந்த இறைவனின் சின்னங்களை அணிந்து வழிபட்டு இறையருளைப் பெற்றுய்வோமாக.

**"ஸர்வேஜனா: ஸுகினோ பவந்து ஸமஸ்த ஸன் மங்களானி பவந்து"**

**சிவஸ்ரீ சு. கேதீஸ்வரநாதக்குருக்கள்**

**ரிச்மண்ட்ஹில் இந்து ஆலய முன்னாள் பிரதம குரு**